DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

PUDUKKOTTAI.

**SC.No.56 /2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | P.W.10 | | | |
| Name | : | மருத்துவர்.பிரதீபா | Calling | : | |
| Father / Husband Name | : | | Religion | : | |
| Village | : | | Caste | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 15.12.2023

**முதல் விசாரணை:–**

நான் கடந்த 2019-ல் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது, மாலை 6 மணியளவில் பாண்டிச்செல்வம் என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் தன்னை கட்டையால் அடித்ததாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு இரண்டுமுறை வாந்தி எடுத்ததாகவும் , தலைவலி இருப்பதாகவும் கூறினார் . அவரை பரிசோதித்தபோது அவருக்கு தலையின் இடதுபக்கத்தில் தலை ஆழமாக கிழிந்த நிலையில் இருந்தது . அவருக்கு தடுப்பூசி மற்றும் தையல் போட்டு சிகிச்சை அளித்தேன். மேலும் அவரை மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன் . நான் பாண்டிச்செல்வத்திற்கு முதலுதவி சிகிச்சை செய்ததற்கு உண்டான ஆவண நகலை தாக்கல் செய்கிறேன். இந்த மருத்துவ ஆவணத்தை கையொப்பம் செய்து நான் தான் வழங்கினேன். இது **அ.சா.ஆ.**2 ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்தில் இருந்து ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு ஒருவர் சிகிச்சை எடுக்க இருசக்கர மோட்டார் வாகனத்தில் வரவேண்டுமென்றால் 5-10 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான் . நான் காயம்பட்ட பாண்டிசெல்வத்திற்கு மட்டுமதான் முதலுதவி சிகிச்சை அளித்தேன் . என்னிடம்

காண்பிக்கப்படும் கு .வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தில் முருகையா மகன் பாண்டிசெல்வம் என்பவரையும், அவரது தகப்பனார் ஆறுமுகம், த/பெ.சுப்பையா என்பவரையும் சிகிச்சைக்கு அழைத்து வந்ததாக இதில் கண்டுள்ளது என்றால் சாட்சி அவ்வாறு இதில் கண்டுள்ளது , ஆனால் தற்போது மற்றொரு நபரை அழைத்து வந்தார்களா என எனக்கு ஞாபகமில் என்று பதில் அளிக்கிறார் . முதலுதவி சிகிச்சை கொடுத்ததை அனுசரித்து சம்மந்தப்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை பதிவு செய்யப்படும் என்றால் சரிதான் . காயமுற்றவருக்கு இரத்த கொதிப்பு சீரான நிலையில் இருந்ததாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். காயமுற்றவர் இரண்டுமுறை வாந்தி எடுத்ததாகவும், தனக்கு தலைவலி இருப்பதாக சொன்ன சங்கதிகளை போலீசார் விசாரிக்கும்போது நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த காயமுற்ற நபர் பதட்டத்தில் ஓடி வந்து ஒரு கடினமான, கூர்மையான Cement Structures மீது விழுந்தால் இத்தகைய காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் சாட்சி வாய்ப்பு உண்டு என்று பதில் அளிக்கிறார்.

***Taken down by me in open court***
***read over to the witnesses and***
***admitted by him/her to be correct.***

***Sessions Judge,***
***Additional District Court,***
***Pudukkottai.***